**செய்தி வெளியீடு எண்: 487** **நாள்:23.07.2021**

**மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள் தலைமையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்த மண்டல அளவிலான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.**

---

சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் இன்று (23.07.2021) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்துச் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு ஆகிய மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அலுவலர்களுடனான மண்டல அளவிலான ஆய்வுக்கூட்டம் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அரசு முதன்மைச் செயலாளர் திரு.கே.மணிவாசன், இ.ஆ.ப., ஆணையர் திருமதி.எஸ்.மதுமதி, இ.ஆ.ப., தாட்கோ மேலாண்மை இயக்குநர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., சென்னை மாவட்ட ஆட்சியர் முனைவர் ஜெ.விஜயாராணி, இ.ஆ.ப., பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் திரு.ராகுல், இ.வ.ப., காவல்துறைக் கூடுதல் இயக்குநர் (சமூக நீதி மற்றும் மனித உரிமைகள்) திரு.ஜெயராமன், இ.கா.ப., காவல்துறைத் துணைத் தலைவர் திருமதி விஜயலட்சமி, இ.கா.ப., தாட்கோ பொது மேலாளர்கள் மற்றும் துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் தாட்கோ மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இனத்தை சார்ந்த 9 பயனாளிகளுக்கு ரூ.67.10 இலட்சம் மதிப்பிலான சரக்கு வாகனம், ஆட்டோ மற்றும் புகைப்படக்கருவிகள் வழங்கப்பட்டது. மேலும் 2019-2020ஆம் கல்வியாண்டில் 100% தேர்ச்சி பெற்ற பள்ளியின் ஆசிரியர்களுக்குத் தலா ரூ.5000/- வீதம் 45 ஆசிரியர்களுக்கு ரூ.2.25 இலட்சம் மதிப்பிலான ஊக்கத்தொகை வழங்கப்பட்டது. ரூ.1.15 கோடி மதிப்பிலான இலவச வீட்டுமனைப் பட்டா 121 நபர்களுக்கு வழங்கப்பட்டது. ரூ.14.50 இலட்சம் மதிப்பீட்டிலான நடமாடும் மீன் உணவகம் பழங்குடியினர் நலத்துறையின் மூலம் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது.

**இக்கூட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள் தெரிவித்ததாவது:** ஆதிதிராவிடர் நலத்துறையின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் நலத்திட்டங்கள் தொடர்பாக மாவட்டங்கள் தோறும் கள ஆய்வுகளை மேற்கொண்டு நலத்திட்ட உதவிகளை

அனைவரும் பெறும் வகையில் பணியாற்றிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ-மாணவியர்கள் பள்ளி இடைநிற்றலைக் கண்காணித்துத் தொடர்ந்து அவர்களின் கல்விக் கற்றலை உறுதி செய்யவேண்டும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலம் செயல்படுத்தப்படும் அரசின் திட்டப் பணிகள் கொரோனா காலத்தில் சரிவர நடைபெறவில்லை என்பது இந்த ஆய்வின் மூலம் தெரிகிறது. தற்போது கொரோனா கட்டுக்குள் வந்திருப்பதால் பணிகளை விரைவுபடுத்துமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார் தொடர்ந்து ஆய்வுக்கூட்டங்கள் நடத்தப்படும் என்றும் அடுத்த ஆய்வின்போது சரிவர பணிகளை மேற்கொள்ளாத அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**